<u>கூடுதல் சார்பு நீதிமன்றம், செய்யாறு.</u>

<u>O.S.No.08/2023</u>

| | |
|---|---|
| 1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பு சாட்சி | **பி.சா. 1** |
| பெயர் | திரு. மூர்த்தி |
| தந்தை பெயர் | திரு. முத்துப்பிள்ளை |
| கிராமம் | வெள்ளளோளம் |
| வட்டம் | வெம்பாக்கம் |
| தொழில் | செக்யூரிட்டி |
| வயது | 45 |

2026–ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 22–ஆம் நாளன்று, திரு.M.விக்னேஷ் பிரபு, M.L., கூடுதல் சார்பு நீதிபதி, செய்யாறு அவர்களின் முன்னிலையில் 1969–ஆம் ஆண்டு உறுதிமொழி சட்டம் (மையச் சட்டம் 44/1969)–இன் வகைமுறைகளுக்குட்பட்டு உளமார உறுதியளிக்கப்படுகிறது.

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**<u>முதல் விசாரணை</u> :**

1. நான் இந்த வழக்கில் 1–ம் பிரதிவாதி ஆவேன். எனது தரப்பு எழுத்து மூலமான முதன்மை பிரமாண வாக்குமூலத்தினை முதன்மை சாட்சியமாக தாக்கல் செய்கிறேன். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். அதனை நான் சொல்லிதான் எனது வழக்கறிஞரால் தயார் செய்யப்பட்டது. அதனை படித்து பார்த்து, வழக்கறிஞர் படித்து சொல்ல சரியென்று ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தேன். எனது தரப்பில் கீழ்க்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்து குறியீடு செய்கிறேன்.

| வ.எண். | தேதி | ஆவணங்கள் |
|---|---|---|
| 1. | 15–03–2006 | முத்துப்பிள்ளை என்பவர் கோவிந்தராஜனுக்கு எழுதி வைத்த செட்டில்மெண்ட் ஆவணத்தின் சான்றிட்ட நகல் – பி.சா.ஆ.1. |

| வ.எண். | தேதி | ஆவணங்கள் |
|---|---|---|
| 2. | 15-03-2006 | முத்துப்பிள்ளை என்பவர் மூர்த்தி எழுதி வைத்த செட்டில்மெண்ட் ஆவணத்தின் சான்றிட்ட நகல் – பி.சா.ஆ.2. |
| 3. | 24-07-2023 | புஷ்பராணி பெயரில் உள்ள கணினி பட்டா (பட்டா எண். 167) – பி.சா.ஆ.3. |
| 4. | 17-07-2001 | புஷ்பராணி, மூர்த்தி, சிவகுமார் பெயரில் உள்ள கணினி பட்டா (பட்டா எண். 167) – பி.சா.ஆ.4. |
| 5. | 24-07-2023 | புஷ்பராணி, மூர்த்தி, முருகன், பெருமாள், சிவகுமார் பெயரில் உள்ள கணினி பட்டா (பட்டா எண். 424) – பி.சா.ஆ.5. |
| 6. | 07-01-2017 | மூர்த்தி, கோவிந்தராஜ் பெயரில் உள்ள கணினி பட்டா (பட்டா எண். 167) – பி.சா.ஆ.6. |
| 7. | – | 1, 2 அயிட்ட சொத்துக்களுக்கான அ பதிவேடு – உண்மை நகல் – பி.சா.ஆ.7. |

எனவே, வாதியின் வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டி பிராத்திக்கிறேன்.

**குறுக்கு விசாரணை :**

(வாதி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.)

என்னால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

M VIGNESH PRABU

Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.01.22 12:03:11 +0530

**கூடுதல் சார்பு நீதிபதி,**
**செய்யாறு.**